அனுப்புநர்
திரு. சா. மார்ஸ்
முதன்மைக் கல்வி அலுவலர்,
முதன்மைக்கல்வி அலுவலகம்,
எழும்பூர்,சென்னை-08

பெறுநர்
செயலர்/தாளாளர்,
அரசு உதவி பெறும்
உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகள்,
சென்னை மாவட்டம்.

----

ந.க.எண். 4945/அ4/2023-2 நாள். 30.06.2023

ஐயா,

பொருள் பள்ளிக் கல்வி – அரசு நிதியுதவி பெறும் உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகள் – அரசு நிதியுதவியுடன் பணிபுரியும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாதோர் – மாத ஊதியம், விடுப்பு , ஊதிய உயர்வு, ஓய்வூதியப் பணப்பலன், ஆசிரியர் நல நிதி முன்பணம்./ கணக்கு முடித்தல் சார்பான நிலுவைக் கோப்பு விவரங்கள் – கோருதல் சார்ந்து.

-------------

சென்னை மாவட்டத்திலுள்ள அரசு நிதியுதவி பெறும் உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளி செயலர் / தாளாளர் அவர்களின் கனிவான கவனம் இப்பொருள் சார்பாக ஈர்க்கப்படுகிறது.

தங்கள் பள்ளியில் அரசு நிதியுதவியுடன் பணிபுரியும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாதோர் சார்பான மாத ஊதியம், விடுப்பு, ஆண்டு ஊதிய உயர்வு, ஓய்வூதியப் பணப்பலன், ஆசிரியர் நல நிதி முன்பணம்./ கணக்கு முடித்தல் சார்பான கோரிக்கைகள் மற்றும் இதர கோப்புகள் மாவட்டக்கல்வி அலுவலர் அளவில் தென் சென்னை, வட சென்னை மற்றும் சென்னை முதன்மைக் கல்வி அலுவலகத்தில் நிலுவையில் இருப்பின் அதன் சார்பாக இணைப்பிலுள்ள படிவத்தில் தங்கள் கோரிக்கைகளை அனைத்து கலங்களும் விடுபடாமல் விவரங்களை பூர்த்தி செய்து இவ்வலுவலகத்திற்கு 05.07.2023 (புதன் கிழமை) அன்று மாலை 5.00 மணிக்குள் அனுப்பிவிட்டு உடன் அதன் நகலை சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு பள்ளிச் செயலர்/தாளாளர் இதன் மூலம் கனிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

இணைப்பு. படிவம்

முதன்மைக்கல்வி அலுவலர்
சென்னை

நகல்
அனைத்து மாவட்ட கல்வி அலுவர்கள் (இடைநிலை) தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காகவும் அனுப்பி வைக்கலாகிறது.

Scanned with OKEN Scanner

படிவம் I

| வ. எண் | பள்ளியின் பெயர் | தலைமையாசிரியர் பெயர் மற்றும் கைபேசி எண் | நிலுவை கோப்புக்குரிய ஆசிரியர் /ஆசிரியரல்லாதோர் பெயர் | நிலுவையில் உள்ள கோப்பின் விவரம் மாத ஊதியம், விடுப்பு , ஊதிய உயர்வு, ஓய்வூதியப் பணப்பலன், ஆசிரியர் நல நிதி முன்பணம்./ கணக்கு முடித்தல் | மாவட்டக் கல்வி அலுவலகம்/ முதன்மைக் கல்வி அலுவலகத்திற்கு கோப்பு அனுப்பிய நாள் | நிலுவையில் உள்ள அலுவலகத்தின் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |

பள்ளிச் செயலர் /தாளாளர்

கையொப்பம்

Scanned with OKEN Scanner